**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**I.A.2/2024**

**in**

**I.A.1/2022**

**in**

**O.S.288/2022**

**அசல் வழக்கு எண்.288/2022**

**வா.சா. –1( அர்ச்சனா தேவி)**

**நாள்.19.10.2024.**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்து ஆதியில் மொட்டையாண்டி என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த சொத்தை யாருக்கு கிரையம் செய்தார்கள் என்றால் சரியாக நினைவில்லை. நான் வேளாங்கண்ணி என்பவரிடமிருந்து அந்த சொத்தை கிரையம் வாங்கினேன். மேற்படி சொத்தை வேளாங்கண்ணி என்பவர் எப்போது யாரிடமிருந்து எந்த ஆவணத்தின் மூலம் கிரையம் வாங்கினார் என்று தெரியுமா என்றால் தெரியாது. வேளாங்கண்ணிக்கு வேறு என்ன , என்ன சொத்துக்கள் இருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஒரு சொத்து என் பெயரிலும் , மற்றொரு சொத்து என் கணவர் கோவிந்தசாமி பெயரிலும் கிரையம் வாங்கியுள்ளோம். இந்த அசல் வழக்கு வேளாங்கண்ணி என்பவர் வாதி கருப்பசாமியிடம் வாங்கிய கடனுக்கு போடப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எந்தெந்த சொத்துக்களை வாதி ஜப்தி செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி வேளாங்கண்ணி என்பவர் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தைப் பொறுத்து பாலசெந்தில்குமரன் என்பவர் பெயரில் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டுள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். அதே போல் பாலசெந்தில்குமரனின் மனைவி சாந்தி என்பவருடனும் வேறொரு சொத்தை பொறுத்து ஒரு கிரைய ஒப்பந்தம் போட்டுள்ளார் என்ற விவரம் தெரியும். அதேபோல் அவர்வேறு ஒரு சொத்தைப் பொறுத்து கணேஷ்குமார் என்பவருடன் ஒரு கிரைய ஒப்பந்தம் போட்டுள்ளார் என்ற விவரம் தெரியும். வேளாங்கண்ணி பல நபர்களிடம் பல

கடன்கள் வாங்கியுள்ளார் என்றால் வெளிநபர்களிடம் அவர் வாங்கிய கடன் பற்றி தெரியாது. ஆனால் கோகுல் சிட் பண்ட்ஸ்ல் அவர் கடன் வாங்கிய விவரம் தெரியும். வேளாங்கண்ணி என்பவர் தருண் கார்ஸ் என்ற பெயரில் கார் டீலிங் செய்து வருகிறார். இந்த மனு போடுவதற்கு முன்பு வாதி கருப்புச்சாமி வேளாங்கண்ணியின் சொத்துக்களை ஜப்தி செய்வதற்காக தாக்கல் செய்த மனுவின் நகல்களை வாங்கி பார்த்து தெரிந்து கொண்டேன். அந்த மனுவில் வேளாங்கண்ணி எதிருரை தாக்கல் செய்த விவரம் தெரியும். வேளாங்கண்ணி தனது எதிருரையில் தனது சொத்துக்களை விற்றது சம்மந்தமாகவோ, கிரைய உடன்படிக்கை செய்து கொண்டது சம்மந்தமாகவோ, எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வேளாங்கண்ணியை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. எனக்கு தெரிந்தவர் மூலமாக சொத்துக்களை விற்பதாக தெரிந்து சொத்துக்களை வாங்கினேன். சொத்துக்கள் கிரையம் வாங்கிய போது அவரை பார்த்து தெரிந்து கொண்டேன். வேளாங்கண்ணி வாதி மற்றும் பலரிடம் வாங்கிய கடன்களை மோசடி செய்ய வேண்டும் என்பதற்காக அவரது சொத்துக்களை பல நபர்கள் பெயரில் ஆவணங்களும், கிரைய ஆவணங்களும் ஏற்படுத்தி உள்ளார் என்றால் சரியல்ல. அது போல் வாதியை ஏமாற்றுவதற்காக நானும், வேளாங்கண்ணியும் சேர்ந்து என் பெயரில் கிரையப்பத்திரத்தை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சொத்து காலியிடம். அந்த சொத்து வேளாங்கண்ணியின் அனுபவத்தில்தான் உள்ளது என்றும் நான் சொல்வது போல் அந்த சொத்தை நான் கிரையம் வாங்கி அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சொத்தைப் பொறுத்து ஜப்தி உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு வேளாங்கண்ணிக்கு நான் அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் இல்லை. நான் கிரையம் வாங்கிய சொத்து ஜப்தி செய்யப்பட்ட விவரம் எந்த தேதியில் தெரிந்து கொண்டேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. வேளாங்கண்ணி சொல்லித்தான் நான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.10.19 16:01:33 +0530

Additional District Judge,

Dindigul.